IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 05/2021 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Ammavasai | CASTE | : | |
| S/O. | Muthaiya | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **15-06-2022**

<u>கு.வி (பிரதிவாதிகள் தரப்பில்) :</u> **15-06-2022**

நீங்கள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சொத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இடைஞ்சல் செய்யாமல் இருந்திட பரிகாரம் கேட்டுள்ளேன். தாவா சொத்து எந்த தேியில் யாரால் கிரையம் வாங்கப்பட்டது என்றால் தேதி, வருடம், மாதம் ஞாபகமில்லை. ஆனால் என்னுடைய தகப்பனார் முத்தையா அவர்களால் சிந்தாமணி, இருளாண்டி மற்றும் இருவர் ஆகியோர்களிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளார். மொத்தம் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கிரையம் வாங்கப்பட்டது என்றால் 21 செண்ட் ஒரு சொத்தும் மற்றும் இதர 3 அயிட்ட சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. மற்ற விஸ்தீரணங்கள் எனக்கு தெரியாது. ஞாபகமில்லை. நீங்கள் சொல்லியது போல் 21 செண்ட் மற்றும் இதர 3 அயிட்ட சொத்துக்கள் சேர்த்து தான் உங்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆம். கிரையம் வாங்கிய சொத்திற்குண்டான புல எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். கிரையம் வாங்கிய சொத்திற்குண்டான நான்கெல்லை விபரம் தெரியுமா என்றால் தன்னுடைய சொத்திற்கு மேற்கே, தெற்கே காயாம்பு என்பவரின் சொத்திற்கு கிழக்கே, லெட்சுமி சொத்திற்கு வடக்கே ஆகும். உங்களால் சொல்லப்பட்டுள்ள நான்கெல்லை விபரங்கள் அனைத்தும் கிரைய ஆவணத்தில் இல்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. உங்களால் தாக்கல செய்யப்படட வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆகியவற்றில் தாவா சொத்திற்குண்டான விபரங்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. அதேபோல் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தில் தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ள என்ற விபரங்கள் இல்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. தாவா சொத்திற்குண்டான

பட்டா எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அதேபோல வா.சா.ஆ,3 ஆன பட்டா எத்தனை சொத்துக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்திற்கு தான் கொடுக்கப்பட்டது. வா.சா,ஆ,3ல் பட்டா உரிமையாளர்களாக கருப்பனமூப்பன், முத்தையா மூப்பன், சங்கர் ஆகியவர்கள் பெயரில் உள்ளது என்று சொன்னால் என்னுடைய தகப்பனார் விலைக்கு வாங்குவதற்கு முன்பு உள்ள உரிமையாளர்கள் பெயர்கள் ஆகும். மேற்படி வா.சா,ஆ.3ல் உரிமையாளர்கள் காலத்தில் இந்த பிரதிவாதி பெயரும் உள்ளது என்று சொன்னால் என்னுடைய தகப்பனார் கிரையம் வாங்குவதற்கு முன்பு உள்ள பட்டாவாகும். வா.சா.ஆ.3ல் தாவா சொத்து என்பது 2வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4, மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் தாவா வழக்கிற்கு தேவையற்ற ஆவணங்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. தாவா சொத்தை நீங்கள் அனுபவம் செய்து வருவதற்கான கிஸ்து ரசீதுகள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. சென்ற வருடம் கிஸ்து செலுத்துவதற்காக சென்ற போது நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் வாங்க மறுத்துவிட்டார்கள். வழக்கு தர்கல் செய்வதற்கு முன்பு தவா சொத்து உங்களுடைய அனுபவத்தில் இருந்ததற்கான கிஸ்து ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் என்னுடைய தகப்பனாரால் அனுபவம் செய்யப்பட்டு வந்தது. வழக்கு உள்ளதால் கிஸ்து ரசீது வாங்க மறுத்துவிட்டார். தாவா சொத்து தற்போது என்ன பயிர் சாகுபடி செய்துள்ளீர்கள் என்றால் கத்தரிக்காய், வெண்டைக்காய், வெங்காயம் போன்ற பயிர்கள் செய்துள்ளோம். வருடம் தோறும் பயிர் செய்வீர்களா என்றால் பயிர்செய்வோம். உங்களால் சொல்லக்கூடிய பயிர்சாகுபடி செய்யப்பட்டதற்கான அடங்கல் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்தை உங்களால் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை, சாகுபடி ஏதும் செய்யப்படவில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. நீங்கள் சொல்வதுபோல் சாகுபடி செய்யப்பட்டு அனுபவம் செய்து வந்திருந்தால் அடங்கல் ஆவணம் தாக்கல் செய்திருப்பீர்கள், உங்களால் தாவா சொத்து அனுபவம் செய்யப்படவில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. தாவா சொத்து உங்களால் அனுபவம் செய்யப்பட்டு வந்தால் கிஸ்து ரசீது செலுத்தியிருப்பீர்கள், ஆனால் நீங்கள் எந்த காலத்திலும் தாவா சொத்தில் அனுபவம் செய்யப்படவில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. தாவா சொத்திற்குண்டான மின் இணைப்பு எண் உங்களுக்கு தெரியுமா என்றால் நான் படிப்பறிவு இல்லாததால் எனக்கு சரியாக தெரியாது. மின் இணைப்பு எந்த சொத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது

என்றால் 21 செண்ட் உள்ள சொத்திற்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. 21 செண்ட் எந்த புல எண்ணில் உள்ளது என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் பிரதிவாதி எந்த தேதியில் இடையூறு செய்தார் என்று வா.சா,ஆ,7ல் சொல்லியுள்ளீர்களா என்றால் 2 வருடத்திற்கு முன்பு தகராறு செய்தார். வா.சா.ஆ.7ல் எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தீர்கள் என்றால் 1 ஏக்கர் 5 செண்டிற்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன். 1 ஏக்கர் 5 செண்ட் என்பது எத்தனை அயிட்ட சர்வே எண்ணிற்குள் கட்டுப்பட்டது என்றால் பட்டாவில் உள்ள சொத்திற்கு கட்டுப்பட்டதாகும். வா.சா.ஆ,8, வா.சா,ஆ.9 ஆகிய ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எந்த தேதியில் தகராறு ஏற்பட்டு காவல் நிலையத்தில் எப்போது புகார் கொடுத்தீர்கள் என்றால் 2 வருடத்திற்கு முன்பு தகராறு ஏற்பட்டு புகார் கொடுத்தேன். நீங்கள் சொல்வதுபோல் தாவா சொத்தில் தகராறு ஏற்பட்டது தொடர்பாக உங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் ஒரு தேதியும், புகார் மனுவில் ஒரு தேதியும் ஒன்றுகொன்று முரணாக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. வா.சாஆ.11ல் தாவா செர்திற்குண்டான பட்டா எண் பற்றி தெரியுமா என்றல் தெரியாது. ஞாபகமில்லை. ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வா.சா,ஆ.11ல் எத்தனை அயிட்ட சொத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் 1 ஏக்கர் 5 செண்டிற்கு கொடுக்கப்பட்டது. வா.சா,ஆ.11ல் உரிமையாளர்களில் இந்த பிரதிவாதி ஒரு உரிமையாளராக 3வது தரப்பினராக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. அது தவறு. வா.சா,ஆ.11ல் தாவா சொத்து 2வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கனவே அசல் வழக்கு எண்..53/2014 உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி அசல் வழக்கு.53/2014 வழக்கிலும் தாவா வழக்கில் கோரியுள்ள பரிகாரமே கேட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.53/2014 வழக்கில் அதே பரிகாரத்தை இதே வழக்கில் கேட்டுக்கொள்ள அறிவுறுத்தினார்கள். அசல் வழக்கு 53/2014 கடந்த 29.04.2019ல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். தாவா செத்தில் இந்த பிரதிவாதியும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. அதனால் கூட்டு அனுபவத்தில் தாவா சொத்து உள்ளதாலும், கூட்டு அனுபவஸ்தர்களில் பிரதிவாதியும் ஒரு கூட்டு உரிமையாளராக இருப்பதாலும், கூட்டு உரிமையாளர் சொத்துக்களில் நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க முடியாது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. தாவா சொத்தில் நீங்கள் எந்த காலத்திலும் அனுபவத்திலோ அல்லது உரிமையிலோ இருந்ததில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. உங்களுடைய பிராதில் கடந்த 04.11.2020, 24.11.2020, 03.12.2020 ஆகிய தேதிகளில் பிரதிவாதி இடையூறு செய்ததாக முன்னுக்குபின் முரணாக சொல்லியுள்ளீர்கள் என்றால் அவ்வாறு சொல்வது சரியல்ல. பிரதிவாதி கூட்டு அனுபவத்தில் இருப்பதால் இடையூறு செய்ய வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. நான்கெல்லை விபரம் குறித்து பிராதில் சரியாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. பிராதில் சொல்லியுள்ள 7 அயிட்ட சொத்துக்களில் பிராது சொத்து என்பது 6வது அயிட்ட சொத்தான சா்வே எண்.717/5 என்று சொன்னால் சரிதான். ஆகையினால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி